**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SC.No. 56/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | L.W.15 / P.W.13 | District | | தஞ்சாவூர் |
| Name | : | மருத்துவர்.திரு.ஜெயப்பிரகாஷ் | Calling | : | மருத்துவர் |
| Father Name | : | தட்சிணாமூர்த்தி | Age | : | 54 |
| Village | : | தஞ்சாவூர் | | : | |

Solemnly affirmed by Tr.A.Dineshkumar, Translator of this court in accordance with the provisions of Act X 1873, on the day of 25.02.2026

**As per circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-dated.21.02.2025 the identity of the witness verified with their identity card. Official ID card of the Witness verified.**

**1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி இறப்பு. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தஞ்சாவூர் வினோதகன் நினைவு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.09.2019ம் தேதி அன்று இரவு 7.45 மணிக்கு பணியில் இருந்தபோது 36 வயதான முருகையன் என்பவரின் மகன் காயம்பட்ட பாண்டிசெல்வன் என்பவரை விஜயகுமார் என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். காயம்பட்ட நபரை பரிசோதித்தபோது அவர் முழு சுயநினைவோடு இல்லை. அழைத்து வந்தவர் காயம்பட்ட நபரை இரண்டு தெரிந்த நபர்கள் கட்டையால் அடித்து, அதே நாள் மாலை 4.30 மணிக்கு அவரது வீட்டில் வைத்து அடித்து ஏற்பட்டதாக கூறினார். அவர் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்று, பின்னர் எங்களிடம் அழழைத்து வந்தார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயம் காணப்பட்டது. தலையின் இடதுபக்கத்தில் 8செ.மீ அளவுள்ள தையல் போடப்பட்ட காயம் இருந்தது. காயம்பட்ட தலைப்பகுதியை CT scan எடுத்து

பார்த்தபோது தலையின் இடதுபக்க கபால எலும்பு முறிவு மற்றும் மூளையின் வலதுபக்கத்தில் கபால எலும்பிற்கும் , மூளைக்கும் நடுவே இரத்தம் உறைந்துபோயிருந்தது. அவருக்கு அறுவை சிகிச்சை , செயற்கை சுவாசம் மற்றும் அவருக்கு தேவையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டது . அவரை அவரது உறவினர்கள் 01.10.2019 ம் தேதி இரவு 8.00 மணிக்கு மருத்துவமனையில் இருந்து சொந்த விருப்பதத்தின் பேரில் வேறு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்வதாக சொல்லி அழைத்துச்சென்றார்கள் . அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது பற்றியும் , அனுமதியின்றி அழைத்துச்செல்லப்பட்டது பற்றியும் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதே சம்பவத்தில் காயம்பட்ட முத்தையா என்பவரின் மகன் 60 வயதான காயம்பட்ட முருகையா என்பவரை பரிசோதித்தபோது சுய நினைவோடு இருந்தார். அவர் தன்னை தெரிந்த நபர்கள் கட்டையால் அடித்து காயம் ஏற்படுத்தியதாக கூறினார். அவரை பரிசோத்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது நெற்றிப்பகுதியில் 3 செ.மீ அளவுள்ள தையல் போடப்பட்ட காயம்
2. வலது தோளில் தொடு வலி மற்றும் 3x3 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம்
3. வலது உள்ளங்கையில் 3x3 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு காயம் ஏற்பட்ட பகுதியை நுண்கதிர் படம் எடுத்தேன் . அவருக்கு உரிய சிகிச்சைகள் அளித்து 23.09.2019 ம் தேதி அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார் . அவருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படங்களில் அவருக்கு எலும்பு முறிவு எதுவும் இல்லை . அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். அந்த **காயச்சான்று அ.சா.ஆ.6** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வினோதகன் மருத்துவமனை தனியார் மருத்துவமனை என்றால் சரிதான் . போலீசார் என்னை விசாரித்தபோது பாண்டிச்செல்வன் மற்றும் முருகையா ஆகியோரை விஜயகுமார் தான் கொண்டு வந்து சேர்த்தார் என்று சொல்லவில்லை என்றால் நான் அவ்வாறு சொன்னதாக என்னுடைய கோப்பில் இல்லை. போலீசார் விசாரணையின்போது எனது சிகிச்சையில் இருந்தபோது 03.10.2019 ம் தேதி காலை 11.26 மணிக்கு சிகிச்சையில் இருநத பாண்டிச்செல்வம் என்பவர் இறந்துவிட்டார் என்று தகவல் தெரிவித்தாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. 03.10.2019 ம் தேதி காயம்பட்ட பாண்டிச்செல்வம் எனது மருத்துவமனையில் சிகிச்சையில் இல்லை என்றால் சரிதான் . அவர் இறந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் முருகையாவிற்கு இடது தோள்பட்டையில் காயம் இருந்ததாக சொன்னேனா என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. காயச்சான்றிதழில் முருகையாவிற்கு என்னென்ன காயங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் நான் குறிப்பாக சொல்லவில்லை, ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சொல்லப்பட்டுள்ள காயங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன் . பாண்டிசெல்வம் என்பவர் பதற்றத்தில் ஓடி வரும்போது கூர்மையான கல்லால் அடிபடும்போது அவருக்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது . முருகையா என்பவருக்கும் அவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**மறு விசாரணை இல்லை.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*